

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (28.11.2023) செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டையில் உள்ள ரேலா மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் ஒருங்கிணைந்த பிரதம மந்திரி மக்கள் ஆரோக்ய திட்ட பயனாளிகளுக்கு காப்பீட்டு அட்டையினை வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.கே.வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், ரேலா மருத்துவமனை இயக்குனர் மரு.முகமது ரேலா, ரேலா மருத்துவமனை தலைமை நிர்வாக அலுவலர் மரு. இளங்குமரன் கலியமூர்த்தி, இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.



தி.மு.க. இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை சிந்தாதிரிப்பேட்டை கலவை தெருவில் மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 62 ‘அ’ வட்ட தி.மு.க சார்பில் பொது மக்களுக்கு நலதிட்ட உதவிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். உடன் திமுக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், மண்டல குழு தலைவரும் சேப்பாக்கம் பகுதி செயலாளர் மதன் மோகன், வட்டச் செயலாளர் மகேஷ். மாமன்ற உறுப்பினர் ஜெகதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வருகின்ற டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி

# 100 இடங்களில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட சிறப்பு முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, நவ.29

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (28.11.2023) செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டையில் உள்ள ரேலா மருத்துவமனையில் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் - 48 திட்டத்தின் 2 இலட்சமாவது பயனாளியை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48**

தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 டிசம்பர் திங்கள் 18ஆம் தேதி மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் - 48 திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அந்த திட்டத்தில் தமிழ்நாட்டில் சாலை விபத்துகளுக்குள்ளானவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்த்தால் அவர்களுக்கு முதல் 48 மணி நேரத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 1 இலட்சம் தந்து அவர்களுடைய இன்னுயிரை காப்பாற்றுவது என்கின்ற மகத்தான திட்டம் இதுவாகும்.

அந்த திட்டத்தில் தமிழ்நாடு முழுவதிலும் 237 தனியார் மருத்துவமனைகளும், 455 அரசு மருத்துவமனைகள் என்று 692 மருத்துவமனைகளில் இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டத்தில் உறுப்பு மருத்துவமனைகளாக செயல்பட்டு வருகிறது. இந்த திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் தேசிய நெடுஞ்சாலைகளிலோ அல்லது பொது சாலைகளிலோ உள்ளிட்ட எந்த சாலைகளில் விபத்து நேர்ந்தாலும் எந்த மாவட்டத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்த மாநிலத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்த நாட்டைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்களுடைய இன்னுயிரை காப்பாற்றிடும் வகையில் ஒரு மகத்தான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தில் முதல் பயனாளியை மேல்மருவத்தூரில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேரில் சந்தித்து நலம் விசாரிக்கப்பட்டது. 50 ஆயிரமாவது பயனாளி சித்தாலப்பாக்கதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேரில் சந்தித்து நலம் விசாரிக்கப்பட்டது. 80 ஆயிரமாவது பயனாளி போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் நானும், துறையின் செயலாளர் அவர்களும் சேர்ந்து சந்தித்து நலம் விசாரிக்கப்பட்டது. 1 இலட்சமாவது பயனாளி சபிதா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சந்தித்து நலம் விசாரிக்கப்பட்டது. 1.50 இலட்சமாவது பயனாளியை பூந்தமல்லி பனிமலர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சந்தித்து நலம் விசாரிக்கப்பட்டது.

அந்த வகையில் தமிழ்நாடு முழுவதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கேயெல்லாம் விபத்துகள் நேர்கிறதோ அங்கேயெல்லாம் அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை விபத்துகள் அடைந்தவர்களை மீட்பது என்பது ஒரு கடின செயலாக இருந்தது. காரணம் காவல் துறையின் விசாரணைகள், நீதிமன்றங்கள் சென்று வருவது போன்ற பல்வேறு சங்கடங்கள் அதில் இருந்தது.

அதனால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் விபத்துக்குள்ளானவர்களை மருத்துவமனையில் சேர்ப்பவர்களின் சேவையை பாராட்டி அவர்களுக்கு ரூ.5,000 ஊக்கத் தொகை தரும் திட்டத்தினையும் தொடங்கப்பட்டது. அதன்படி இன்று 2 இலட்சமாவது பயனாளி ரேலா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இவர்களைத் தவிர 2 இலட்சத்து 01 மற்றும் சுமார் 07 பேர் வரை இம்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். நேற்று மற்றும் இன்று காலை நடந்த விபத்து என்று விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஐசக் ராஜ் (வயது 21) என்கின்ற கல்லூரி மாணவர் ஒருவர் இருசக்கர வாகன விபத்து ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அவரை நேரில் சந்தித்து நலம் விசாரிக்கப்பட்டது.

இவரைத் தொடர்ந்து ஆந்திரா மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டில் எம்.டெக் கல்லூரி படிப்பை பயிலும் இன்னொரு மாணவரும் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். அவரையும் சந்தித்து நலம் விசாரித்தோம். இந்த திட்டம் தொடங்கி இன்று வரை 2 இலட்சம் பயனாளிகளை கடந்து இருக்கிறது. இந்த 2 இலட்சம் பயனாளிகளுக்கு தமிழ்நாடு அரசு இதுவரை தந்திருக்கும் தொகை ரூ. 173.77 கோடி ஆகும். இந்த திட்டங்கள் மட்டுமல்லாமல் உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை போன்ற பல்வேறு சிகிச்சைகளில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது.

**முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டம் முகாம்**

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2009ஆம் ஆண்டு ஜீலை 23ஆம் நாள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தில் இதுவரை 1 கோடியே 45 இலட்சம் குடும்பங்கள் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கான அட்டையினை பெற்று இருக்கிறார்கள்.

இந்த திட்டத்தில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ரூ.5 இலட்சம் வரை பிரிமியத் தொகை கிடைக்க இருக்கிறது. தமிழ்நாடு அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் யுனெடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு ரூ.1546 கோடி ஆண்டொன்றிற்கு செலுத்தி வருகிறது. 5 ஆண்டுகளுக்கு இந்த திட்டத்தில் ரூ.7,730 கோடி செலவு என்கின்ற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 1,829 மருத்துவமனைகளில் இக்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 854 அரசு மருத்துவமனைகளிலும் 975 தனியார் மருத்துவமனைகள் என்று இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாட்டில் புதியதாக திருமணம் ஆனவர்கள் புதிய குடும்பங்கள் உருவாகிக் கொண்டிருப்பதாலும் விடுபட்ட குடும்பத்தினருக்கும் இக்காப்பீட்டுத் திட்டத்தில் இணைப்பதற்கு ஏதுவாக கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு 100 இடங்களில் காப்பீட்டுத் திட்டத்திற்கான முகாம்கள் நடத்தப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் வருகின்ற டிசம்பர் மாதம் 2ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழ்நாடு முழுவதும் 100 சட்டமன்றத் தொகுதிகளில் 100 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. இந்த காப்பீட்டு முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.கே.வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், ரேலா மருத்துவமனை இயக்குனர் மரு.முகமது ரேலா, ரேலா மருத்துவமனை தலைமை நிர்வாக அலுவலர் மரு. இளங்குமரன் கலியமூர்த்தி, இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.




